# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 25

## மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 3 (HG30)

## ஜனவரி–பிப்ரவரி 2025

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

### பிரிவு – 1

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. வேதநாயகம் பிள்ளை எழுதிய முதல் நாவல் எது?
2. மலை உச்சியில் உள்ள ஒளி போல மறைவற்றது எது?
3. பஞ்சமூலம் என்பதன் பொருள் யாது?
4. திருக்குறள் எந்த பாவகையைச் சார்ந்தது?
5. வடக்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
6. திணை என்ற சொல்லின் பொருள் யாது?
7. ஓவியத்தில் சிறப்பானது எது?
8. கானகத்தில் மணி தங்கியிருந்த இடம் எது?
9. மனித நாகரிகம் தோன்றிய இடம் எது?
10. சித்திரக்கூடத்தில் உள்ள முக்கிய ஓவியம் எது?

### பிரிவு – 2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. வலவன் ஏவா வான ஊர்தி என்றால் என்ன?
2. கல்லணை எந்த ஆற்றின் குறுக்கே யாரால் கட்டப்பட்டது?
3. வில் போரில் வென்றவன் யார்?
4. குற்றாலத்தில் உள்ள அருவிகள் யாவை?
5. மொழி கற்றலின் இலக்கு யாது?
6. வாழை + பழம் சேர்த்து எழுதி, எவ்வகை விகாரம் எனக் கூறுக.
7. இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு அமையும்?
8. முல்லை நில மக்களின் தொழில்கள் யாவை?
9. செய்யுளை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டுவன யாவை?
10. தமிழ்நாடு யாரை எல்லாம் வாழ்விக்கிறது?
11. வாழ்வார், வாழாதார் யாவர் எனக் குறள் கூறுகிறது?

12. நண்பரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
13. பிளந்த பனங்கிழங்கு எதற்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது?
14. மழை முகில் கண்டு வானில் பறந்து திரிவன எவை?
15. யாப்பின் உறுப்புகள் யாவை?

**பிரிவு – 3**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. நான்மணிக்கடிகை – இச்சொல்லின் பொருளை எழுதுக.
3. இளங்கோவடிகள் குறிப்பு வரைக.
4. கலம்பகம் என்றால் என்ன?
5. அணி என்றால் என்ன? பிறிதுமொழிதலணியை விளக்குக.
6. பெண்களால் முன்னேற முடியும் என்பதை பெண்கல்வி பாடல் மூலம் பாரதிதாசன் எவ்வாறு விளக்குகிறார்?
7. வானூர்திகள் குறித்து ரைட் சகோரதரர்கள் எடுத்த முயற்சிகளை எழுதுக.
8. 'சினம் விடுக' – என நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**பிரிவு – 4**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. குற்றால அருவியின் அழகு குறித்து எழுதுக.
2. புகழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
3. எட்டுவகை பொருள்கோள்களை விளக்கி வரைக.

**பிரிவு – 5**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. மணி கண்ட கனவுகளைத் தொகுத்தெழுதுக..
2. வேற்றுமை உருபின் அறுவகைப் பெயர்களை எழுதி, விளக்கம் கொடுத்து சரியான உதாரணம் தருக.

.........